புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# திருப்பத்தூர் மாவட்டம் உடையாமுத்தூர் வீரபத்திரர் கோயிலின் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்

**முனைவர் ஆ. பிரபு,**
**நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர்,**
**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**
**திருப்பத்தூர் - 635601.**

**க. உமா,**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),**
**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**
**திருப்பத்தூர் - 635601.**

**(திருவள்ளுவர் பல்கலைக்கழகம் – சேர்க்காடு இணைவு பெற்றது)**

## முன்னுரை

குறும்பர் இன பழங்குடியினர் தென்னிந்தியாவின் பல மாவட்டங்களிலும் காணப்படுகின்றனர். வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் வாழும் குறும்பர் பழங்குடியினர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களின் சமுதாயமனது குலங்களை அடிப்படையாகக் கொண்டது. குலமுறை சமுதாயம் தமிழகத்தில் பல இன மக்களிடையில் காணப்பட்டாலும் இக்காலக்கட்டத்தில் பெரும்பாலான சமுதாயத்தினரிடம் அதிகமாக இல்லை. மாறிவரும் நாகரிக உலகில் குலமுறை என்பது கடைபிடிக்கப்படாததாக உள்ளது. குறும்பர் பழங்குடி மக்களிடையில் இம்முறை இன்று வரை மதிக்கப்படுகிறது. குல முறைப்படி குறும்பர் சமுதாயங்களின் அமைப்புகள் காணப்படுகின்றன.இவர்களின் குலங்களின் பெயர்களானது அவர்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்கள், காணும் பொருட்கள், மரம் செடி கொடிகள் என பலவற்றை வைத்து தொடர்புப்படுத்தி

ஏற்படுத்தப்பட்டது. தென்னிந்திய பகுதிகளில் குறும்பர் இனத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குலங்கள் இருப்பினும் திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 20 குலங்கள் காணப்படுகின்றன. இவர்களின் குலதெய்வமாக வீரபத்திரர் விளங்குகிறார். திருப்பத்தூர் மாவட்டம் உடையாமுத்தூர் பகுதியில் அமைந்திருக்கும் வீரபத்திரர் கோவிலில் குறும்பர் இன மக்களின் தமரான் உற்சவங்கள் (சாமி செய்தல்) பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உடையாமுத்தூர் வீரபத்திரர் கோயில் தல வரலாறு**

திருப்பத்தூர் மாவட்டம், உடையாமுத்தூர் பகுதியில் 1965ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீரபத்திரர் கோவிலில் 90க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்தவர்கள் வழிபடுகின்றனர். இதில் பண்ண குலம், ஆனை குலம், அரி குலம், தும்ப குலம், தேவ குலம், அள்ளு குலம், சாயர் குலம், காளை குலம் முதலான பல குலத்தை சார்ந்த மக்களும் இக்கோயிலில் வந்து வழிபாடு செய்கின்றனர். இவற்றுள் பூசாரி குலமாக பண்ண குலம் விளங்குகிறது. உடையாமுத்தூர் பண்ண குல மக்களின் பூர்வீகமாக திகழ்கிறது. பண்ண குலத்தை சார்ந்த மக்கள் உடையாமுத்தூர், திருப்பத்தூர் சி. கே ஆசிரமம், கோடியூர், சிம்மணபுதூர், செவ்வாத்தூர் ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஏறக்குறைய 150 குடும்பங்களுக்கு மேல் இப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். வீரபத்திரர் ஊர் கோயில் உடையாமுத்தூர் ஊர் பகுதியிலும், காட்டு கோயில் உடையாமுத்தூர் ஊருக்கு வெளியிலும் அமைந்துள்ளது.

**தமரான் செய்தல்**

ஐந்து அல்லது ஏழு வருடங்களுக்கு ஒருமுறை தமரான் செய்தல் எனப்படும் திருவிழா நடைபெறுகிறது. இதில் 5 பலகைச் சாமிகள் தயார் செய்து மூன்று நாட்கள் தமரான் உற்சவங்கள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. தமரான் செய்ய வேண்டுமானால் பங்காளிகளையும் சம்மந்திகளையும் சேர்த்து தமரானுக்கு நாள் குறிப்பார்கள்.

குறிக்கப்பட்ட நாளினை கோல்காரர் மூலமாக தங்கள் கோயிலில் வழிபாடு செய்யும் அனைவருக்கும் தெரிவிப்பர். தற்காலத்தில் பத்திரிகை அடித்து அனைவருக்கும் கொடுத்து தமரான் விழா பற்றி அழைப்பு விடுக்கின்றனர்.

குறிக்கப்பட்ட நாளுக்கு மூன்று நாட்கள் முன்பாக, கோயிலைச் சார்ந்த முக்கியமான பெரியவர்களான ஊர் கவுண்டர், தர்மகர்த்தா, கோல்காரர்கள், பூசை செய்யும் பூசாரிகள் ஆகியோர் தீர்த்தமலைக்குச் சென்று தலைமுழுகி விட்டு தீர்த்தம் கொண்டு வருகின்றனர். நாள் குறிக்கப்பட்டதிலிருந்து தமரான் முடியும் வரை மிகவும் கடுமையான விரத முறையை கடைபிடிக்கின்றனர். தம்மரான் செய்வதற்கு நாள் குறிக்கப்பட்ட பின்னர் அசைவ உணவுகளை தவிர்த்து விடுகின்றனர். இலையில் மட்டுமே உணவு உண்கின்றனர். பாய்மேல் படுத்தல் கூடாது. எந்த துக்க நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளக் கூடாது. உடன் பங்காளிகளை தவிர்த்து பிற இடங்களில் இவர்கள் உண்பதில்லை. காலணிகளைக்கூட அணிவதில்லை. வீரபத்திரர் மிகவும் உக்கிரமான தெய்வம் என்பதால் வீரபத்திரரை வழிபடும் போது தூய்மை மிக மிக அவசியம். எனவே தான் பெரும்பாலானவர்கள் வீரபத்திரர் படத்தைக் கூட வீட்டில் வைத்து வழிபடுவது இல்லை. அந்த அளவுக்கு வீரபத்திரர் வழிபாட்டில் தூய்மை முதல் இடத்தை பெற்றுள்ளது.

தமரான் உற்சவம் நடைபெறும் முதல் நாளன்று ஊர் கோயிலில் இருக்கும் பலகைச் சாமிகளை வெளியில் எடுத்து தீர்த்த மலையில் இருந்து கொண்டுவரப்பட்ட நீரினை அதன் மீது தெளித்து குலதெய்வச் சிலைகளை மூங்கிலில் கட்டி மனைகளை உருவாக்குவர். வீரபத்திரர் மனை, நிங்கம்மா மனை, ஓசராயன் மனை, ஒசாமா மனை, சென்னப்பன் மனை உள்ளிட்ட ஐந்து மனைகளைக் கட்டி, செம்புக் குடத்தில் அரிசி மற்றும் நாணயங்களைப் போட்டு, ஒம்பாலை எனப்படும் தென்னை பூக்களைக் கொண்டு வந்துக் கட்டி அலங்கரித்து, அதன் பின்பு பல நிறங்களில் உள்ள துணிகளைக் கட்டி உற்சவமூர்த்தி தயாரிப்பர். விழா நடைபெறும் நாளன்று கொம்புகள், தப்பட்டைகள், மணிகள் முழங்க ஐந்து மனைச்சாமிகளுடன் உடையாமுத்தூர் பகுதியில் இருந்து சித்தேரி பகுதியில் உள்ள

கமகேரி ஏரியை நோக்கிச் செல்வர். ஏரிகரைகளில் குறும்பர் பழங்குடிகளால் செய்யப்பட்ட கம்பளி விரித்து அதில் மனைச்சாமியை இறக்கி வைப்பார்கள். மூங்கிலால் செய்யப்பட்ட பலகையில் உள்ள அலங்காரங்களை நீக்கிவிட்டு தங்களின் முன்னோர்களின் சிலைகளை பலகையில் கட்டப்பட்ட அமைப்புடன் ஆற்றில் தலை முழுகுவார்கள். நீராடிய பின்னர் பலகைச்சாமியை கொண்டு வந்து மீண்டும் தென்னம் பூ, மலர்கள் மற்றும் துணி போன்றவற்றைக் கட்டி பலகைச்சாமியை தயாரிப்பார்கள். பலகைச்சாமி தயாரித்தவுடன் கன்னடத்தில் பாட்டுக்கள் பாடி மனைகளுக்கு முன் சேவையாட்டம் ஆடி, பேட்டி கொடுத்து உற்சவமூர்த்திக்கு சக்தியை வரவழைப்பார்கள். அதன்பின்னர் கமகேரி ஏரி பகுதியில் வளர்ந்த தென்னை மரத்தின் தேங்காய்களைப் பறித்து அதனை உரித்து, மஞ்சள் தூளைத் தலையின் மேல் வைத்து தலையில் தேங்காய் உடைப்பார்கள். அங்கு ஆடு அல்லது மாட்டின் பாலில் வெல்லம், வாழைப்பழம் மஞ்சள் தூள் கலந்து உருவாக்கப்படும் பானகத்தை அனைவருக்கும் கொடுப்பார்கள். பின் அங்கிருந்து மனைச்சாமி உடையாமுத்தூர் காட்டுக்கோயிலுக்கு கொண்டு வரும்போது மனைகள் வெளியில் சென்று வந்ததால் ஊருக்கு எவ்வித தீங்கும் விளையக் கூடாது என்பதற்காக ஊர் எல்லையில் ஒரு ஆட்டினை பலி கொடுப்பார்கள். பலகைச்சாமிகளை காட்டு கோயிலில் வைத்து முறையாக அங்கு தமரான் பூசைகள் நடைபெறும்.

வீரபத்திரசாமிக்கு தமரான் உற்சவம் இரவு நேரங்களில் நடைபெறும். பல மாவட்டங்களில் இருந்து வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. வீரபத்திரர் உற்சவங்களுக்கு முன்னர் சேவையாட்டம் ஆடப்படுகிறது. குழந்தைகள், ஆண்கள் மட்டுமே இவ்வாட்டத்தினை ஆடுவார்கள். 6 முதல் 10 பேர் வரை ஆடுகின்றனர். இதில் முக்கியமான இசைக்கருவி தப்பட்டை ஆகும். ஓர் இரவு முழுவதும் கண்விழித்து ஆண்கள் இவ்வாட்டத்தினை ஆட பெண்கள் இவ்வாட்டத்திற்கான பாடல்களை முழுவதும் பாடுவர். முறையாக சேவையாட்டத்தை கற்றுக் கொண்டவரே உற்சவமூர்த்தியின் முன்பு ஆட முடியும். சேவையாட்டம் முடிந்த பிறகு வீரபத்திரருக்கு முறையான பூசைகள் நடைபெறுகிறது.

வீரபத்திரரை வழிபடுவோர் அனைவரும் வழிபாடு நாட்களில் கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுகின்றனர். அதில் ஒன்று வாய்க்கட்டுப் பூஜையாகும். முகம், தலைமுடி, மூக்கு வாய்ப்பகுதி என அனைத்தையும் இறுக்கமாக மூடிக்கொண்டு கண்கள் மட்டுமே தெரியும் வகையில் முகமூடி அணிவது போல் வெள்ளைநிறத் துணி கொண்டு கட்டிப் பூஜை செய்வதே வாய்க்கட்டுப்பூசை ஆகும். வீரபத்திரருக்கு பூஜை செய்யும்போது மூச்சுக்காற்றோ, எச்சிலோ பட்டுவிடக்கூடாது என்பதே இதற்குக் காரணமாகும். வீரபத்திரர் துடிப்பான தெய்வம், சுத்தமான தெய்வம், வீரமுடைய தெய்வம் என்பதால் எந்த வகையிலும் எச்சில் படக்கூடாது. இதைக் கருத்தில் கொண்டு இத்தகைய வாய்க்கட்டுப்பூஜை செய்கின்றனர்.

வாய்க்கட்டிச் செய்யாத பூஜையை வீரபத்திரர் ஏற்றுக் கொள்வதில்லை என்று பலரும் நம்புகின்றனர். வீரபத்திரசுவாமிக்கு சந்தனம், பண்டாரம் இடுவார்கள். வெற்றிலை, பாக்கு, பழம் வைப்பார்கள். பூமாலை போடுவார்கள். முதலில் ஊதுபத்தி ஆராதனை காட்டுவார்கள். பின்பு சாம்பிராணி ஆராதனை செய்வார்கள். கற்பூர தீபாராதனை செய்யும்போது அனைவர் மீதும் தீர்த்தம் தெளிப்பார்கள். அப்போது தாரை, தப்பட்டை முழங்க, கொம்பு ஊதுவார்கள். குலேலோ சொல்லி கூக்குரலிட்டு இறைவனை அழைப்பார்கள். இறைவன் சுவாமி அருள் வந்து மனிதனின் உடலில் புகுந்து தெய்வம் வந்து முட்டிபோட்டு உட்கார்ந்து கையை நீட்டுவார்கள். உடனே அங்கு அவர்களது தலையில் தேங்காய் உடைப்பார்கள். ஒருவர் மீதே ஐந்து முதல் ஆறு தேங்காய்கள் தொடர்ச்சியாக உடைத்துக் கொண்டே இருப்பார்கள். அவ்விடம் விரிச்சி கேட்டலும் நிகழ்கிறது.சுவாமி அருள் வந்து தேங்காய் தன் தலையில் போட்டுக் கொண்டவர்கள் அந்த தேங்காயை வேறு யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் மட்டுமே சாப்பிடுவர். இது தொன்றுதொட்டு நடந்து வரும் பழக்கமாகும்.தலைமேல் தேங்காய் உடைத்ததன் பிறகு பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என அனைவரும் தங்களை பிடித்திருக்கின்ற காற்று, கருப்பு, பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஆகிய தீய சக்திகள் விலக சாட்டை அடிகளை

போட்டுக் கொள்வார்கள். பேய்களை விரட்டுதலும் அப்போது நடைபெறும்.விடியற்காலை 3 மணிக்கு மேல் குழந்தைகளுக்கு முடி எடுக்கும் சடங்கு நடைபெறுகிறது. பிறந்த குழந்தைகளின் முதல் தலைமுடியை அவர்களுடைய குலதெய்வத்திற்கு கொடுத்தப் பின்புதான் மொட்டை அடிக்கின்றனர். பாட்டியின் மடிமீது அமர்த்தி குழந்தைகளுக்கு முடி எடுக்கப்படுகிறது.

முடி எடுக்கும் சடங்குகள் முடிந்த பிறகு இறந்தவர்களை கோயிலில் நிறுத்தும் சடங்கு ஒன்றையும் செய்கின்றனர். இப்பழங்குடி மக்களில் யாரேனும் இறந்தால் தலை முழுகச் செல்லும் போது அவர்களுடைய நினைவாக ஆற்றில் உள்ள கல்லினை கொண்டு வருவர். தம் முன்னோர்களின் உயிர் அக்கல்லில் உறையும் என நம்புகின்றனர். தமரான் உற்சவம் செய்யும் நாளன்று கல்லினை நீராட்டி, பூசை செய்து கோயில் இருக்கும் தலவிருட்சம் மரத்தின் அடியில் சேர்த்து விடுவர். இதனை பெரியோர்களை கோயிலில் நிறுத்தும் சடங்காக இப்பகுதி மக்கள் செய்கின்றனர்.காலையில் அன்னதானம் முடித்து, மனைச்சாமிகளைத் தூக்கிக்கொண்டு ஊர் கோவிலுக்கு செல்வார்கள். செல்லும் வழியில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மனைத்தூக்கிச் செல்வோரின் பாதங்கள் படுமாறு தரையில் நெடுஞ்சாண்கிடையாக படுத்திருப்பர். இதனால் இவர்களின் பாவங்கள் விலகி வாழ்வில் அனைத்து நலன்களும் கிடைக்கும் என நம்புகின்றனர். ஊர் கோவிலில் பூசை செய்து மனைகளை இறக்கி வைத்து விட்டு மனைகளைப் பிரித்து எந்த இடத்தில் இருந்து மனை கட்டுதலுக்கு உண்டான பொருட்களை எடுத்தார்களோ, அவ்விடத்திலேயே அப்பொருட்களை வைத்து விடுவார்கள். பொருட்களை இடம் மாற்றி வைத்து விட்டால் ஊருக்கு தீங்கு ஏற்படும் என நம்புகின்றனர்.

**சிறப்பு பூசைகள்**

பௌர்ணமி நாட்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. நாட்டுக்கார்த்திகை அன்று பிற்பகலில் தீபம் ஏற்றி வழிபடுகின்றனர். நாட்டுக்கார்த்திகை இக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஐந்து அல்லது ஏழு வருடங்களுக்கு ஒரு முறை செய்யப்படும் தமரான் உற்சவத்தில் குழந்தைகளுக்கு முடி எடுப்பது போன்று

நாட்டுக்கார்த்திகையில் குழந்தைகளுக்கு முதல்முறையான பூ முடி கொடுத்தல் நடைபெறுகிறது. அன்னதானமும் நடைபெறுகிறது.

**கோயிலின் சிறப்புகள்**

பிற மனைகளுடன் சேராத மனை சென்னப்பன் மனை ஆகும். இம்மனையை கோயிலுக்குள் கொண்டு வருவதில்லை. இவர் மிகுந்த கோபம் கொண்டவர் என்பதனால் அவருக்கென்று தனியாக கோயில் உள்ளது. ஆகவே சென்னப்பன் மனையை மட்டும் அவ்விடத்திற்கு கொண்டுச்சென்று பூசை செய்து இறுதியாக ஊர் கோயிலுக்கு கொண்டு வந்து விடுவர்.

வீடுகளில் தமரான் செய்ய நினைப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை கோயில் நிர்வாகிகளிடம் கொடுத்துவிட்டு நாள் குறிக்க வேண்டும். வீடுகளுக்கு மனைகளை கொண்டுச் செல்லும்போது எவ்வளவு தூரமாக இருந்தாலும் தலையில் சுமந்துக் கொண்டு செல்வார்கள். மனைகளை வாகனத்தில் ஏற்றுவது இல்லை.

**முடிவுரை**

குறும்பர் சமுதாயம் ஒரு தொன்மை வாய்ந்த, வீரம் செறிந்த, ஆன்மீகம் செழித்த ஒரு பழமை வாய்ந்த பெருமைமிகு இனம் ஆகும். பண்டைய காலம் தொட்டு இன்றுவரையிலும் இப்பழங்குடி மக்கள் கலாச்சாரம், பண்பாடு, கலை, வழிபாடு, குடும்ப கட்டமைப்பு ஆகியவற்றை கடைபிடித்து வருகின்றனர் என்பதை இக்கட்டுரையின் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

**பார்வை நூல்கள்**

1. தொல்லியல் நோக்கில் குறுமன்ஸ் பழங்குடி - முனைவர் தி. சுப்பிரமணியன்
2. குறுமன்ஸ் பழங்குடியினர் வரலாறும் கலாச்சாரமும்-
   ஜெயசீலன்
3. வேலூர் மாவட்ட குருமன்ஸ் பழங்குடி மக்களின் வாழ்வியல் பண்பாடு
   முனைவர் வாசுகி கண்ணப்பன் பேராசிரியர் முனைவர் விஜயலட்சுமி ராமசாமி
4. தமிழகப் பழங்குடிகள் பக்தவத்சல பாரதி

5. தமிழ்நாட்டு பழங்குடிகள் மானிடவியல் நோக்கில்

முனைவர் பெ. தமிழ் ஒளி

6. மக்களும் மரபுகளும் நா. வானமாமலை

சந்தித்தவர்கள்

1. லிங்கன்-வயது 73- கோடியூர். 9442310513.
2. ரேவுணு- வயது 78- செவ்வாத்தூர் - 9751053075.
3. வீரபத்திரன் - வயது 58 - உடையாமுத்தூர். 8508065789
4. பீரன்- வயது 67 உடையாமுத்தூர் 9566748529
5. சங்கர்-வயது 49 சிம்மணபுதூர் 9751142728.